# பாரதி மகளிர் கல்லூரி(தன்னாட்சி), வடசென்னை – 108.

## பட்டமேற்பு விழா அறிக்கை – 04.04.2018

*“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றவை யவை”*

கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு ஏதும் இல்லை. அத்தகைய கல்விச் செல்வத்தை மாணவிகளின் வளமான வாழ்விற்கும் சீர்மிகு முன்னேற்றத்திற்கும் பயன்படும் வகையில் எம் கல்லூரி கடந்த 51 ஆண்டுகளாக சிறப்புடன் வழங்கி வருகிறது.

1998ஆம் ஆண்டில் தன்னாட்சி நிலைக்கு உயர்த்தப்பட்ட பின் நடைபெறும் 16 வது பட்டமேற்பு விழாவில் 2016-ம் ஆண்டில் தேர்ச்சிப் பெற்ற மாணவிகளின் பட்டமேற்பு அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். எம் கல்லூரியில், முதல் சுழற்சியில் 13 இளநிலைப் பாடப்பிரிவுகளும், 13 முதுநிலை பாடப்பிரிவுகளும், 5 ஆய்வியல் மற்றும் 4 முனைவர் பட்ட பாடப்பிரிவுகளும், இரண்டாம் சுழற்சியில் 5 இளநிலை பாடப்பிரிவுகளும் திறமையான ஆசிரியர்களால், செம்மையாக நடத்தப்பட்டு வருகின்றன. பல பாடப்பிரிவுகளில் ஆங்கில வழிக்கல்வியோடு தமிழ்வழிக்கல்வியும் பயிற்றுவிக்கப்படுகிறது.

ஏப்ரல் 2016-ல் நடைபெற்ற தேர்வுகளில் எம் மாணவியர் பெற்ற தேர்ச்சி விபரம்.

### இளம் அறிவியல் பட்ட வகுப்புகள்:

| | | |
|---|---|---|
| தேர்வு எழுதியவர்கள் | - | 545 |
| தேர்ச்சி பெற்றவர்கள் | - | 451 |
| தேர்ச்சி விழுக்காடு | - | 83% |

### முதுநிலை அறிவியல் பட்ட வகுப்புகள்

| | | |
|---|---|---|
| தேர்வு எழுதியவர்கள் | - | 112 |
| தேர்ச்சி பெற்றவர்கள் | - | 82 |
| தேர்ச்சி விழுக்காடு | - | 73% |

### ஆய்வியல் நிறைஞர் பட்ட வகுப்புகள்

| | | |
|---|---|---|
| தேர்வு எழுதியவர்கள் | - | 7 |
| தேர்ச்சி பெற்றவர்கள் | - | 6 |
| தேர்ச்சி விழுக்காடு | - | 86% |

இளநிலை வகுப்புகளில், பகுதி-I –ல் – தமிழ், தெலுங்கு, ஹிந்தி மற்றும் உருது ஆகிய மொழிகளும், பகுதி II-ல் ஆங்கில மொழியும் கற்றுத் தரப்படுகிறது.

இளம் அறிவியல் பாடப்பிரிவில் பகுதி Iல் தேர்ச்சி விபரம்

| | | |
|---|---|---|
| தமிழ் | - | 98 விழுக்காடு |
| தெலுங்கு | - | 100 விழுக்காடு |
| ஹிந்தி | - | 100 விழுக்காடு |
| உருது | - | 100 விழுக்காடு |

இளம் அறிவியல் பாடப்பிரிவில் பகுதி II –ல் தேர்ச்சி விபரம்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | - | 89 விழுக்காடு |

## இளம் அறிவியல் பாடப்பிரிவுகளில் தேர்ச்சி விபரம்:

| | | |
|---|---|---|
| உயிர் வேதியியல் | - | 75 விழுக்காடு |
| தாவரவியல் | - | 100 விழுக்காடு |
| வேதியியல் | - | 63 விழுக்காடு |
| கணினியியல் | - | 84 விழுக்காடு |
| புவியியல் | - | 91 விழுக்காடு |
| கணிதவியல் | - | 77 விழுக்காடு |
| இயற்பியல் | - | 89 விழுக்காடு |
| உயர் விலங்கியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் | - | 85 விழுக்காடு |

## முதுநிலைப் பாடப்பிரிவுகளில் தேர்ச்சி விபரம்:
## முதுநிலை அறிவியல் பாடப்பிரிவுகள்:

| | | |
|---|---|---|
| உயிர் வேதியியல் | - | 64 விழுக்காடு |
| தாவரவியல் | - | 81 விழுக்காடு |
| வேதியியல் | - | 88 விழுக்காடு |
| கணினி அறிவியல் | - | 81 விழுக்காடு |
| பயன்பாட்டு புவியியல் | - | 89 விழுக்காடு |
| கணிதவியல் | - | 77 விழுக்காடு |
| இயற்பியல் | - | 58 விழுக்காடு |
| விலங்கியல் | - | 50 விழுக்காடு |

**ஆய்வியல் நிறைஞர் பாடப் பிரிவுகளில் தேர்ச்சி விபரம்:**

| | | |
|---|---|---|
| விலங்கியல் | - | 100 விழுக்காடு |
| புவியியல் | - | 100 விழுக்காடு |
| உயிர் வேதியியல் | - | 67 விழுக்காடு |

இந்த பட்டமேற்பு விழாவில் தேர்ச்சி அறிக்கையை சிறப்பு விருந்தினர் முன் சமர்ப்பிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உரிய நேரத்தில் பட்டங்களை வழங்கி, இப்பட்டமேற்பு விழா இனிது நடைபெற உதவிய சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு எம் கல்லூரியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, பட்டம் பெறுவதற்கு உறுதுணையாய் இருந்த பெற்றோர்களுக்கும், ஊக்குவித்த ஆசிரியபெருமக்களுக்கும், என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பட்டம் பெற்ற அனைத்து மாணாக்கியர்களும் வளமான வாழ்க்கைப் பெற்று சீரும் சிறப்புடன் வாழ எம் கல்லூரி ஆசிரியர்கள் அனைவர் சார்பிலும் நல்லாசிகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி!

*******